DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC.No. 531/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1- பிரகாஷ் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 05.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் கூலிக்காரன் பாளையத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன் விபத்தில் அடிபட்ட தாண்டாயி எனது பாட்டியாவார். கடந்த 23 .02.2024 ஆம் தேதியன்று காலை சுமார் 08:30 மணியளவில் எனது பாட்டி பவானி- மேட்டூர் ரோட்டில் கூலிக்காரன்பாளையம் பஸ் ஸ்டாப் அருகே ரோட்டை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி கடந்தபோது அதே ரோட்டில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி வந்த பைக் மோதி எனது பாட்டிக்கு கை மற்றும் கால்களில் பலத்த அடிபட்டுள்ளதாக தகவல் கிடைத்து, நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்று தனியார் ஆம்புலன்ஸ் மூலம் எனது பாட்டியை பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஈரோடு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். பின்னர் நான் பவானி காவல் நிலையம் வந்து மேற்படி விபத்து தொடர்பாக புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால், சரிதான். விபத்தில் அடிப்பட்ட எனது பாட்டி ரோட்டை கடக்கும்போதுதான் இவ்விபத்து ஏற்பட்டது என்றால், சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் சொல்வதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், அடிப்பட்டவர் உங்கள் பாட்டி என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

STC.No. 531/2024 Crime No. Station

| | | | |
|---|---|---|---|
| Name | PW-2- மோகன்ராஜ் | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 05.05.2025 |

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் ஏமம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை, கடந்த 1 ஆண்டிற்கு முன்பு ஒரு நாள் மாலை சுமார் 05.00 மணியளவில் நான் கூலிக்காரன்பாளையம் பேருந்து நிறுத்தம் அருகே நின்றிருந்தபோது அங்கு அன்றைய தினம் காலையில் ஏற்பட்ட விபத்து தொடர்பாக போலீசார் விபத்து நடந்த இடத்திற்கு வந்து விசாரித்து என் முன்னிலையில் பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார்கள். பார்வை மகஜரில் நான் கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது போலீசார் என்னை விசாரித்தார்கள்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 உங்களுக்கு எப்படித் தெரியும் என்றால், அவர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால், சரிதான். சாட்சி கையொப்பம் கேட்டார்கள், நான் போட்டேன். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.